04.12.2023
O.S.No.254/2009

பி.வா.சா.1.திரு.சேதுபதி த.பெ.சேவுகராஜா

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. தாவா சொத்தின் நான்கு மாலில் மேற்கு பக்கம் மாலாக நத்தம்-மதுரை பிரதான சாலை இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிறுதூர் ரீசர்வே எண்.16/3 சி1 பி, 16/3 சி2, 17/12, 17/13, 17/10 மற்றும் 17/9 அடங்கிய சொத்துக்களை வாதி தரப்பினர் கிரையம் வாங்கி அனுபவித்து வருவதாக வாதிகள் வழக்காடுகிறார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ-3 ஆவணமான பட்டா பாஸ் புத்தகத்தில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண்ணாக 17/1 ஏ 1 ஏ என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட சொத்தாக நான் வழக்காடுவது பி.வா.சா.ஆ-3 ஆவணமான பட்டாவில் கண்டுள்ள சர்வே எண்.17/1 ஏ 1 ஏ சொத்து என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் சர்வே எண்.17/1 ஏ 1 ஏ-ல் மொத்த விஸ்தீரணம் 3 ஹெக்டேர் 38 ஏர்ஸ் என குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வாதிகள் வழக்காடும் ரீசர்வே எண்.16/3 சி1 பி, 16/3 சி2, 17/12, 17/13, 17/10 மற்றும் 17/9 -ல் அடங்கிய சொத்துக்கள் எனது பட்டா பாஸ் புத்தகமான பி.வா.சா.ஆ-3 ஆவணத்தில் காணப்படவில்லை என்றால் இல்லை, ஆனால் சர்வே எண்.158/1 ல் உட்பிரிவு செய்யப்பட்டவை தான் வாதிகள் கோரும் அனைத்து சர்வே எண்களும். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ-1 கிரைய ஆவணம் மற்றும் பி.வா.சா.ஆ-2 பொது அதிகார பத்திரம் ஆகியவற்றில் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்ட் சொத்தை கிரையம் பெற்றதாக எந்த வாசகமும் இடம் பெறவில்லை என்றால் சரிதான், அந்த வாசகம் விடுபட்டுள்ளது. அவ்வாறு விடுபட்டுள்ள வாசகத்தை சேர்ப்பதற்கு மேற்படி 2 ஆவணங்களிலும் திருத்தல் ஆவணம் எதுவும் ஏற்படுத்திக் கொண்டோமா என்றால் இல்லை.

3. பி.வா.சா.ஆ-1 மற்றும்பி.வா.சா.ஆ-2 ஆவணங்கள் தாவா சொத்தை பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டிடம் இருந்து பவர் பெற்றதாகவோ, கிரையம் பெற்றதாகவோ எழுதி வாங்காமல் சொத்தில் விவகாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணமே தவிர, மேற்படி ஆவணங்களை வைத்து எனக்கோ, எனது முதல்வருக்கோ மேற்படி சொத்தை பொறுத்து எவ்வித உரிமையும் எங்களுக்கு சித்தித்தது இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வாதிகள் கிரையம் வாங்கிய சொத்துக்களுக்கு உட்பிரிவு செய்யப்பட்டு அவர்கள் பெயருக்கு பட்டா உட்பட வருவாய் ஆவணங்கள் அனைத்தும் மாறிவிட்ட பின்பும், அதை எதிர்த்து கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டியான சௌந்திராஜன் என்பவர் எந்தவித ஆட்சேபணையும் வருவாய் அதிகாரியிடம் தெரிவித்து ரத்து செய்யும் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. பி.வா.சா.ஆ-1ல் கண்டுள்ள கிரைய தொகையை நான் வங்கி வரைவோலை மூலம் செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 வரையான வாதிகள் தரப்பு கிரைய ஆவணங்களில் கண்டுள்ள கிரைய தொகை கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்ட் பெயரில் பஞ்சாப் நேஷனல் வங்கியின் Pay Order மூலமாக கொடுக்கப்பட்டுள்ளதாக அந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 வரையான வாதிகள் தரப்பு கிரைய ஆவணங்களில் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அதன் டிரஸ்டி சௌந்தராஜன் என்பவர் வாதிகள் கிரையம் செய்து கொடுத்ததாக குறிக்கப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணத்தை நான் பார்க்கவில்லை என்பதால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 வரையான ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களுக்கு வாதிகள் பெயரில் பட்டா வழங்கப்பட்டு, மேற்படி சொத்துக்கள் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அந்த உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள்தான், இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் காட்டப்பட்டுள்ள சர்வே எண்கள் என்றாலும், அதை பற்றி எனக்கு தெரியாது.

5. வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 வரையான ஆவணங்களில் சர்வே எண்.158 மட்டும் குறிக்கப்பட்டுள்ளது என்பதால் அந்த சொத்திற்கும் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதுதான் எனது வழக்கு என்றால் சரிதான். சர்வே எண்.158 என்ற புல எண் 1981ம் ஆண்டுக்கு முன்பு இருந்தது, அதன்பின்பு அந்த சர்வே எண்.158/1, 158/2 என உட்பிரிவு செய்யப்பட்டு விட்டது. வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 வரையான வாதிகள் தரப்பு ஆவணங்களில் உள்ள சர்வே எண்.158 என்பது பல்வேறு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் கிரையம் வாங்கிய போது சர்வே எண்.158 என்று ஒரு புல எண்ணே கிடையாது, அதற்கு முன்பே அது 158/1, 158/2 என பிரிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 வரையான வாதிகள் தரப்பு ஆவணங்களில் கண்டுள்ள சர்வே எண்.158ல் கட்டுப்பட்டுள்ள சொத்துக்கள் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டை தவிர வேறு நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு நான் எந்த வாதமும் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீ.சா.ஆ-1 முதல் நீ.சா.ஆ-3 வரையான நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு காலதாமதமாக செய்யப்படும் ஆட்சேபணையை ஏற்றுக்கொள்ளுமாறு எங்கள் தரப்பில் இடைக்கால மனு எண்.37/2012 என்ற மனு தாக்கல் செய்து அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. அவ்வாறு மேற்படி மனு தள்ளுபடியானதே தெரியாது என்று இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 வரையான வாதிகள் தரப்பு ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்கள் கோபாலகிருஷணகோனுக்கு கட்டுப்பட்டு, அதன் டிரஸ்டி சௌந்தராஜன் வாதிகளுக்கு முறையாக கிரையம் செய்து கொடுத்திருப்பதாலும், அந்த ஆவணங்களின் மெய்த்தன்மையை ஆட்சேபணை செய்வதற்கு, எனது தரப்பிற்கு எந்தவிதமான அருகதையும் இல்லை என்றால் சரியல்ல.

7. பி.வா.சா.ஆ-4 முதல் 6 வரையான ஆவணங்கள் அசல் வழக்கு எண்.260/2007 வழக்கிற்கு சம்பந்தபட்ட ஆவணங்கள் என தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தாக்கல்செய்த சமயத்தில் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ-3 பட்டா பாஸ் புத்தகம் என் கைவசம் இருந்ததா என்றால் இருந்தது. அவ்வாறு என் கைவசம் இருந்தும், மேற்படி பி.வா.சா.ஆ-3 ஆவணத்தில் கண்டுள்ள பட்டா எண்.1609 என்ற எண்ணையும், அதில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.17/1ஏ1ஏ என்ற சர்வே எண்ணையும் பி.வா.சா.ஆ-4 முதல் 6 வரையான ஆவணங்களில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், எனது முதல்வர் காளீஸ்வரன் அந்த சமயத்தில் வெளிநாட்டில் இருந்ததால் பட்டா பாஸ் புத்தகம் எனதுகைக்கு வரவில்லை என்பதால் மேற்படி விவரங்களை, அந்த வழக்கில் என்னால் குறிப்பிட முடியவில்லை, நான் கூறும் மேற்படி விளக்கம் இந்த வழக்கிற்காக சொல்லப்படும் உண்மைக்கு புறம்பான விளக்கம் என்றாலும் சரியல்ல.

8. பி.வா.சா.ஆ-4 முதல் 6 வரையான ஆவணங்களில் கண்டுள்ள பிரதிவாதியான கார்த்திகேயன் என்பவர் எனக்கு வேண்டப்பட்ட நபர் என்றாலும், அவருடன் கைகோர்த்து கொண்டு அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வது போல் தாக்கல் செய்து, அவர் அந்த வழக்கில் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டு, நான் ஒருதலைபட்ச தீர்ப்பு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பி.வா.சா.ஆ-1 கிரைய ஆவணம் எழுதி வாங்கும் முன்பு பி.வா.சா.ஆ-3 பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் கிரையம் வாங்கிய பின்புதான் அந்த பட்டா எனக்கு கொடுக்கப்பட்டது. நான், பி.வா.சா.ஆ-1 கிரைய ஆவண அடிப்படையில் அந்த சொத்தை கிரையம் வாங்கும் முன்பு அந்த சொத்திற்குண்டான பட்டாவை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ-7 பட்டா பெறுவதற்கு நான் மனு செய்தேனா என்றால் மனு செய்தேன்.

9. நான் உட்பிரிவு செய்வற்கு மனு கொடுத்தேனா என்றால், அவ்வாறு மனு கொடுக்க போகும் சமயத்தில்தான், ஏற்கனவே தவறாக உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்ற சங்கதி எனக்கு தெரியவந்து அதை ரத்து செய்யக்கோரி நான் மனு கொடுத்தேன். அவ்வாறு தவறாக உட்பிரிவு செய்யப்பட்டது வாதிகள் பெயருக்கு என்று தெரிவித்தார்களா என்றால் பிச்சைராமன் மகன்கள் பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டு விட்டது என்று கூறினார்கள். வாதிகள் அந்த பிச்சைராமனின் மகன்கள் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளவாறு ஏற்கனவே தாவாசொத்துக்கள் பிச்சைராமனின் மக்களான வாதிகள் பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா ஏற்பட்டுள்ள விவரம் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-3 பட்டா பாஸ் புத்தகம் பெறும்போதே சர்வே எண்.17/1ஏ1ஏ என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாக மேற்படி ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் அது உட்பிரிவு அல்ல, கார்லேசன் ஆகும்.

10. கார்லேசன் என்ற வார்த்தை பி.வா.சா.ஆ-3ல் காணப்படுகிறதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ-3 ஆவணமும் எனது தரப்பில் தவறான தகவல் கொடுத்து நான் கூட்டுப்பட்டாவாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள உட்பிரிவு மற்றும் பட்டா மாற்றம் 1999ம் ஆண்டுக்கு முன்பே ஏற்பட்டு விட்டதாக என்றால் இருக்கலாம் என சாட்சி கூறுகிறார். நாங்கள் சொத்தை கிரையம் வாங்கும் முன்பு மதுரை-நத்தம் ரோட்டுக்கு கிழக்கு பக்கம் அமைந்துள்ள கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எத்தனை பட்டாக்கள் மற்றும் உட்பிரிவுகள் ஏற்பட்டுள்ளது என்ற விவரத்தை அறிந்த கொண்டேனா என்றால் கிரையம் வாங்கும் முன்பே வில்லங்க சான்றிதழ் பார்த்துதான் கிரையம் வாங்கினோம், அதில் சர்வே எண்.158/1 என மட்டும் தான் இருந்தது, வேறு எந்த வில்லங்கமும் அதில் அப்போது இல்லை. வருவாய் ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, சர்வே எண்.158/1க்கு கிராம நிர்வாக அலுவலரிடம் சென்று வருவாய் ஆவணங்களை சரி பார்த்தோம்.

11. ரீசர்வே எண்.16/3சி1பி, 16/3சி2, 17/12, 17/13, 17/10 மற்றும் 17/9-ல் உள்ள சொத்து மற்றும் அதன் பட்டாக்களையும் சர்வே எண்.158/1-ல் உட்பிரிவு செய்யப்பட்டு அதன் மூலம் ஏற்பட்டது என்றால் சரியல்ல, சர்வே எண்.158-ஐ உட்பிரிவு செய்து ஏற்படுத்தி உள்ளார்கள். எதற்காக வாதிகள் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்ய மனு செய்தேன் என்றால் நாங்கள் கிரையம் வாங்கிய சர்வே எண்.158/1-ஐ ஏற்கனவே வேறு நபர்களுக்கு தவறுதலாக உட்பிரிவு செய்துவிட்டோம் என வருவாய் துறையில் கூறியதன் அடிப்படையில் அந்த உட்பிரிவு மற்றும் பட்டாவை ரத்து செய்யக்கோரி மனு செய்தேன். யாருக்கு எதிராக நான் மேற்படி மனுவை தாக்கல் செய்தேன் என்றால் வாதிகளுக்கு எதிராக மனு தாக்கல் செய்தேன். வாதிகளுக்கு ஏற்பட்ட பட்டா மற்றும் புல எண் உட்பிரிவுகள் சர்வே எண்.158/1-ஐ பொறுத்து தான் என்றால் சரிதான்.

12. வாதிகள் கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தை முறையாக கிரையம் வாங்கி உள்ளார்கள் என்றாலும், அவர்களது கிரைய ஆவணங்களில் சர்வே எண்.158/1-க்கு பதிலாக சர்வே எண்.158 என்று குறிப்பிட்டு கிரையம் வாங்கிவிட்ட ஒரே காரணத்திற்காக, அந்த ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்று நான் வீண்வாதம் செய்து வருவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ-8 "அ" பதிவேடு ஆவணத்தில் சர்வே எண்.17/1ஏ1ஏ என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-1 ஆவணப்படி அந்த சொத்தை நான் கிரையம் வாங்கியதாக சொல்வதற்கு முன்பு சர்வே எண்.17/1ஏ1ஏ இருந்துள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-1 கிரைய ஆவணத்தில் உண்மையான சொத்து விவரங்களை குறிப்பிடாமல் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அந்த ஆவணத்தை உற்பத்தி செய்து குழப்பம் ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல.

13. வாதிகள் முறையான சொத்து விவரத்தை காட்டி 1983ம் ஆண்டே வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 ஆவணங்களின் படி தகுந்த பிரதிபிரயோஜனம் வங்கி மூலமாக செலுத்தி

கோபாலகிருஷ்ணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அதன் டிரஸ்டி சௌந்தராஜன் என்பரிடம் இருந்து பெற்று அனுபவம் செய்து வருகீறார்கள் என்றாலும், வாதிகள் பெயரில் பட்டா உட்பட வருவாய் ஆவணங்கள் அனைத்தும் ஏற்பட்டு விட்டது என்றாலும், அவர்களது சொத்தின் பாத்தியதையும், அனுபவத்திற்கும் எந்தவித இடையூறும் செய்வதற்கு எனக்கு அருகதை இல்லை என்றாலும், வாதி குறிப்பிட்டது போல் எங்கள் தரப்பினர் கடந்த 16.09.2009ம் அன்று வழக்கிடை சொத்துக்களில் பிரவேசிக்க முயற்சித்த காரணத்தினால் இந்த வாதிகள் தங்களது உரிமையும் அனுபவத்தையும்பாகதுகாத்த செய்த இந்த வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் நான் வீண் தாவா செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.